## மூன்றாவது அடிப்படை

**சஃஈ** *திருக்ஃகுர்ஆனில் அல்லாஹ் தஆலா கூறுகின்றான்:*

إِنَّ ٱلصَّفَا وَٱلۡمَرۡوَةَ مِن شَعَآئِرِ ٱللَّهِۖ ﴿١٥٨﴾

*பொருள்: நிச்சயமாக, ஸஃபா மற்றும் மர்வா (எனும் இரு குன்றுகள்) அல்லாஹ்வின்அடையாளச்சின்னங்களில்உள்ளவையாகும் (அல்பஃகரஹ்:158)*

**சஃஈ செய்வதற்கான விதிகள் கீழ்வருமாறு**

1 **நிய்யத்**

2 **முறையாக தவாஃப் செய்து முடித்தல்**

3 **ஹஜ் செயபவர் நடந்துசெல்லும் ஆற்றல் பெற்றிருத்தல்**

4 **சுற்றுக்கள் ஸஃபாவில் துவங்கி மர்வாவில் முடித்தல்** இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள், அல்லாஹ் தஆலா எங்கிருந்து துவங்கியிருக்கின்றானோ அங்கிருந்தே துவங்கவேண்டும் (நிசாயி), அதன்பின் அவர்கள் இந்த வசனத்தை ஓதிக்காண்பித்தார்கள்.

إِنَّ ٱلصَّفَا وَٱلۡمَرۡوَةَ مِن شَعَآئِرِ ٱللَّهِۖ ﴿١٥٨﴾

*பொருள்: நிச்சயமாக, ஸஃபா மற்றும் மர்வா (எனும் இரு குன்றுகள்) அல்லாஹ்வின் அடையாளச் சின்னங்களில் உள்ளவையாகும் (அல் பஃகரஹ்:158)*

5 **ஸஃபாவிலிருந்து மர்வாவிற்கு இடையே ஏழு சுற்றுக்கள் வந்து செல்லவேண்டும்** ஸஃபாவிலிருந்து மர்வாவிற்குச்சென்றடைவது ஒரு சுற்றும் மர்வாவிலிருந்து ஸஃபாவிற்குச் சென்றடைவது இரண்டாவது சுற்றாகவும் கருதப்படும். இவ்விதமாக, ஏழு சுற்றுக்கள் வந்து செல்லவேண்டும்.

6 **ஸஃபாவிலிருந்து மர்வாவிற்கு இடையிலான தூரம் முழுவதுமாகவே கடந்து செல்லவேண்டும், முற்றுப்பெறாமல் விட்டுவிடக்கூடாது.**

7 **ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து செய்யவேண்டும், இடையில் கால அவகாசம் அளிக்கக்கூடாது**

**சஃஈ செய்வதில் சுன்னத்துகள்**

1 **தவாஃப் மற்றும் தவஃபுடைய இரண்டு ரகஅத்து நஃபிலான தொழுகைக்குப் பின் ஹஜருல் அஸ்வதை முத்தமிட்டு அல்லது இஸ்திலாம் செய்துகொண்டு பாபுஸ் ஸஃபாவிலிருந்து சஃஈ செய்யப் புறப்படவேண்டும்.**

www.uzalfalahi.com

**2** **முறையாக தவாஃப் செய்து முடித்தல்**

**3** **தூய்மையுடனும் உளூ செய்துகொண்டு மறைக்கும் ஆடை அணிதல்**

**4** **துஆ செய்யவேண்டும்** இதனைப்பற்றி இறைத்தூதர் ﷺ அவர்கள் ஸஃபாவிற்கு அருகில் சென்றடைந்தபோது இந்த வசனத்தை ஓதிக்காண்பித்தார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

إِنَّ ٱلصَّفَا وَٱلۡمَرۡوَةَ مِن شَعَآئِرِ ٱللَّهِۖ ﴿١٥٨﴾

*பொருள்: நிச்சயமாக, ஸஃபா மற்றும் மர்வா (எனும் இரு குன்றுகள்) அல்லாஹ்வின் அடையாளச் சின்னங்களில் உள்ளவையாகும் (அல் பஃகரஹ்:158). அதன்பின் அவர்கள் ﷺ கூறினார்கள், எதனைப்பற்றி அல்லாஹ் முதலில் கூறியிருக்கின்றானோ அங்கிருந்தே சஃஈ செய்யத் துவங்குங்கள், அதன்பின் அவர்கள் ஸஃபா குன்றின்மீது ஏறினார்கள், அவர்களுடைய பார்வை கஅபதுல்லாஹ்வின்மீது பட்டபோது அவர்கள் ஃகிப்லாவை நேக்கித் திரும்பி அல்லாஹ்வின் ஏகத்துவத்தைப் பற்றி (தவ்ஹீது) எடுத்துரைத்து தக்பிர் சொன்னார்கள், அதன்பின் கூறினார்கள்:*

لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ، لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ، أَنْجَزَ وَعْدَهُ، وَنَصَرَ عَبْدَهُ، وَهَزَمَ الْأَحْزَابَ وَحْدَهُ

*பொருள்: வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத்தவிர வேறு யாருமில்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணை யாருமில்லை, ஆட்சியதிகாரம் அவனுக்கே உரியது, புகழனைத்தும் அவனுக்கே உரியது, அவன் எல்லாவற்றின்மீதும் வல்லமையுடையவன், ஒருவனேயான அல்லாஹ்வைத்தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை, அவன் தன்னுடைய வாக்குறுதியை நிறைவேற்றிவிட்டான், அவனுடைய அடியானுக்கு உதவியும் புரிந்தான், அவன் தனித்தே அனைத்துக் கூட்டத்தினரையும் தோற்கடித்தும்விட்டான் (முஸ்லிம்).*

**5** **இரண்டு பச்சை நிறத் தூண்களுக்கிடையில் ஆண்கள் வேகமானத் துள்ளி நடந்து செல்லவேண்டும் (தற்போது அங்கே சுவரில் பச்சை நிற மின்விளக்குகள் பொருத்தப்பட்டிருக்கின்றன)** வேகமாக நடந்துசெல்வது ஸஃபாவிலிருந்து மர்வாவிற்குச் செல்லும்போது மேற்கொள்ளவேண்டும், மர்வாவிலிருந்து ஸஃபாவிற்குத் திரும்பிச்செல்லும்போது சாதாரணமாவே நடந்துசெல்லவேண்டும் என்பது பெரும்பாலானவர்களுடைய கருத்தாகும்.

* * *

www.uzairfalahi.com